# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 63/பேரூ/2024**
**நாள் : 28.11.2024**

திருமதி. தி. அனிதா
அய்யம்பாளையம்,
திண்டுக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அய்யம்பாளையம் தேர்வு நிலை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், அய்யம்பாளையம், குட்டிகரடு போகும் பாதை, கதவு எண். 11.4.1D என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. தி. அனிதா, என்பவரின் 06.12..2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.12.2023 அன்று பெறப்பட்டு, 63/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திண்டுக்கல் மாவட்டம், அய்யம்பாளையம், குட்டிகரடு போகும் பாதை, கதவு எண். 11.4.1D என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. தி. அனிதா, என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"நான் குடியிருக்கும் வீதி பாதை மொத்தம் 6 அடி உள்ளது. அதில் திரு. பரமசிவம் செட்டியாரின் மகன் திரு. நடராஜன் என்பவர் வீதியை ஆக்கிரமித்து வாசற்படி கட்டி வருகிறார். இதனால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே தாங்கள் தயவு கூர்ந்து மேற்படி கட்டடத்தை கள ஆய்வு செய்து மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற ஆவன செய்யும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அய்யம்பாளையம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரை கோரப்பட்டது.

3) அய்யம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 09.10.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

“அய்யம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.1006/1629–ல் திரு. பரமசிவம் செட்டியார் என்பவரின் மகன் திரு. ப. நடராஜன் என்பவர் வீதியினை ஆக்கிரமிப்பு செய்து படிக்கட்டு கட்டியுள்ளதாகவும், அதனை அகற்றக்கோரி திருமதி. தி. அனிதா என்பவரால் 25.04.2023 நாளிட்ட புகார் மனு அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பு செய்துள்ள நபருக்கு அய்யம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி வாயிலாக ஆக்கிரமிப்பினை அகற்றக்கோரி அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் மனுதாரர் மக்கள் குறைதீர்க்கும் நாளில் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டாட்சியர் அவர்களிடம் மனு செய்துள்ளதைத் தொடர்ந்து, ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலக கடித ந.க.எண். 3279/2023/ஆ2, 21.11.2023 நாளிட்ட கடிதத்தின்படி, ஆக்கிரமிப்பை அகற்றித் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அய்யம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி 24.11.2023 நாளிட்ட அலுவலக கடிதத்தில் ஆக்கிரமிப்பு பகுதி குறித்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் வாயிலாக ஆக்கிரமிப்பு அளவீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்படி, ஆக்கிரமிப்பினை 15.12.2023 அன்று அளவீடு செய்வதற்கு தேதி நிர்ணயம் செய்யப்பட்டு ஆத்தூர் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து குறிப்பாணைக் கடிதம் கிடைக்கப்பெற்றது.

இதனைத் தொடர்ந்து 15.12.2023 அன்று பேரூராட்சி செயல் அலுவலர் முன்னிலையில் நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளா ஆகியோர் ஆக்கிரமிப்பு பகுதியினை அளவீடு செய்து பேரூராட்சி செயல் அலுவலரிடமும் ஆக்கிரமிப்பு செய்தவர்களிடமும் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, ஆக்கிரமிப்பு செய்த நபர் மேற்படி ஆக்கிரமிப்பினை தாமாகவே அகற்றி உள்ளார் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி ஆக்கிரமிப்பு செய்த திரு. நடராஜன் என்பவரே ஆக்கிரமிப்பினை அகற்றக் கொண்டதாகவும், தனது மனு மீது மேல்நடவடிக்கை தேவையில்லை எனவும், இது தொடர்பாக இனி மனு ஏதும் கொடுக்கமாட்டேன் எனவும், விசாரணைக்கு அழைக்கும் பொழுது முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் எனவும் எழுத்து மூலமாக மனுதாரர் திருமதி. அனிதா என்பவர் மனு சமர்ப்பித்துள்ளார் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன், எனவே இவ்வழக்கினை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரானஅய்யம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 21.11.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.11.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திருமதி. தி. அனிதா என்பவர் 21.11.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6) எதிர்மனுதாரரான அய்யம்பாளையம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி சு. ஈஸ்வரி என்பவர் 21.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"திண்டுக்கல் மாவட்டம், அய்யம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட குட்டிகரடு பாதையில் திரு. நடராஜன் என்பவர் பொதுப்பாதையை ஆக்கிரமித்து வாசற்படியை விதிமீறி கட்டி வருகிறார் என்கின்ற மனுதாரரின் புகார்மனு வரப்பெற்றதும் 15.12.2023 அன்று பேரூராட்சி செயல் அலுவலரின் முன்னிலையில் நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர் இடத்தினை அளவீடு செய்து திரு. நடராஜன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து படிக்கட்டுகள் கட்டியுள்ளதை உறுதி செய்து ஆக்கிரமிப்பாளர் திரு. நடராஜன் என்பவரிடம் சுட்டிக்காட்டப்பட்டதில், அவர் தாமாகவே ஆக்கிரமிப்பு செய்துள்ள படிக்கட்டுகளை அகற்றியுள்ளார். மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதை மனுதாரர் திருமதி தி. அனிதா என்பவர் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டுள்ளார் என்பதை இம்முறை மன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" - என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, அய்யம்பாளையம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம், அய்யம்பாளையம் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திருமதி தி. அனிதா என்பவர் 06.12.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், திண்டுக்கல் மாவட்டம், அய்யம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட குட்டிகரடு பாதையில் திரு. நடராஜன் என்பவர் பொதுப் பாதையினை ஆக்கிரமிப்பு செய்து வாசற்படியை கட்டியுள்ளதால் போக்குவரத்து இடையூறு ஏற்படுவதாக புகாராக தெரிவித்து, ஆக்கிரமிப்பை அகற்றிட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதரரின் புகார் மனு வரப்பெற்றதும், பேரூராட்சி செயல் அலுவலர், வருவாய்த் துறையின் மூலம் ஆக்கிரமிப்பு தொடர்பான இடத்தினை நிலஅளவை செய்து, மனுதாரர் புகாராக தெரிவிக்கும் திரு. நடராஜன் என்பவரால் விதிமீறி ஆக்கிரமிப்பு செய்து வாசற்படியை கட்டியுள்ளதை உறுதி செய்யப்பட்டு, ஆக்கிரமிப்பாளர் திரு. நடராஜன் என்பவரிடம் சுட்டிகாட்டப்பட்டதில், ஆக்கிரமிப்பாளர் தாமாகவே முன்வந்து தான் ஆக்கிரமிப்பு செய்த வாசற்படியை அப்புறப்படுத்தி உள்ளார் என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தின் மூலம் தெரியவருகிறது. மேலும், ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட விவரத்தை பேரூராட்சி செயல் அலுவலரால் மனுதாரர் திருமதி. தி. அனிதா என்பவருக்கு தெரிவிக்கப்பட்டதில், மனுதாரரும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் செயல் அலுவலரின் வாக்குமூலத்தின் மூலம் அறியவருகிறது. இந்நிலையில் அய்யம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. தி. அனிதா,
கதவு எண். 11.4.1D,
குட்டிகரடு போகும் பாதை,
அய்யம்பாளையம், திண்டுக்கல் மாவட்டம்,

2. செயல் அலுவலர்,
அய்யம்பாளையம்தேர்வு நிலை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

28/11/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்
சென்னை–600 032